1974 சனவரி 21]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் சற்று முன்னாலே கூறியபடி இந்தியன் வங்கியிலே கடன் உதவிபெற்றுக் தான் இந்த ஹாஸ்டலும் கட்டப்படுகிற செயற்குறிப்பு இருக் கிறது. கடன் உதவி பெற்றவுடன் இதுவும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

*** 41 வினா—திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக்கு நலத்துறை மூலமாக ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டோர் அரசினர் மாணவர் இல்லம் கல்வி ஆண்டு 1973-74-ல் துவக்க ஏற்கெனவே ஆணை விடுக்கப்பட்டுள்ளது.

குடகனாறு திட்டம்

* 42 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,**
திரு. என். கிட்டப்பா,
திரு. பெ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு திட்டத்தில் ஆக்கப்பணிகள் தொடங்கி விட்டனவா ?

(இ) அரவக்குறிச்சி தொகுதி ஆண்டிப்பட்டி மஞ்சைவெளி கிராமப் பகுதிக்கு இத்திட்டத்திலிருந்து பாசன வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) குடகனாறுத் திட்டத்தினால் அரவங்குறிச்சித் தொகுதியில் பெரிய மஞ்சுவெளி கிராமம் மட்டும்தான் பயனடை யும். ஆண்டிப்பட்டிக் கிராமம் இத்திட்டத்தினால் பயனடை யாது.

[1974 சனவரி 21

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி கிராமமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மண்தோன்றிய காலந்தொட்டே பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஒரே ஒரு நதி தான் ஓடுகிறது. ஆகவே, அந்தப் பயன்களை அந்தப் பிரதேசங்களுக்கு விஸ்தரிப்பதற்கு அரசு கருணைகூர்ந்து முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்குக் கருணை இருக்கிறது. ஆற்றிலே நீர்தான் போதாது. அந்தக் காரணத்தினாலே அந்தப் பகுதிகளைச் சேர்ப்பதற்கில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குடகனாறு திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? மத்திய அரசு ஒப்புதல் அளித்துவிட்டதா? எப்பொழுது அளித்தது என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதன் மதிப்பீடு ரூபாய் 212 இலட்சம் ஆகும். மத்திய அரசின் ஒப்புதல் பற்றிய தகவல் இப்பொழுது இல்லை. ஆனால் நமது அரசு ஒப்புதல் அளித்து வேலை துவங்கியாகிவிட்டது.

கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம்

*** 43 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரூபாய் 319 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு, தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. காவிரி நீர்த்தகராறுக்கு தீர்வு காணும் வரையில், காவிரி நீர்ப்பள்ளத்தாக்கில் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்குவது விரும்பத்தக்கதாயிராது என்று இந்திய அரசு, மிக அண்மையில் இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. இந்திய அரசின் பதில் பரிசீலனையில் உள்ளது.